DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 772/2024**

**Deposition of LW1 examined as PW1** (Complainant) Dt. 16.02.2026

| | |
|---|---|
| Name | நடராஜன் |
| Father's/Husband's Name | சுவாமிநாதன் |
| Village | காத்திருப்பு |
| Taluk | |
| Age | 48/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 16.02.2026

(Accused present. )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து செம்பதனிருப்பில் மளிகை கடை வைத்து நடத்தி வருகிறேன். தேதி, மாதம் நினைவில் இல்லை. ஒரு நாள் நான் எனது கடையில் இருந்த போது கடை வாசலில் யாரோ சிலர் தகராறு செய்து எனது கடையில் இருந்த சாமான்களை உடைத்து சேதப்படுத்தினார்கள். இரவு நேரம் என்பதால் அவர்கள் யார் என்று தெரியவில்லை. எனக்கும் எதிரிக்கும் ஏற்கனவே கருத்து வேறுபாடு இருந்ததால் எதிரி தான் செய்திருப்பார் என்ற சந்தேகத்தின் பேரில் மிகைப்படுத்தி புகார் அளித்துவிட்டேன் சம்பவ இடத்தில் எதிரியை நான் பார்க்கவில்லை. தற்பொழுது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னிட்டு போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டது. சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

எதிரியை எனக்கு தெரியும். எனது ஊரை சேர்ந்தவர். எதிரியோடு சமாதானமாகி நான் சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 21.05.2024 ம் தேதி இரவு 9.00 மணி அளவில் எனது கடைக்கு வந்த ஆஜர் எதிரியிடம் கொடுக்கவேண்டிய பழைய பாக்கியை கேட்ட போது என்னை தகாத வார்த்தைகளில் திட்டி கடையில் இருந்த பொருட்களை உடைத்து கொலை மிரட்டல் விடுத்ததாக புகார்மனுவில் கூறிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டபடியால் அவரை வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக

16/2/26

சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை